Teachers Training Schools

* 571 *Q.*—Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of (i) Teachers' Training Schools and (ii) Pupil Teachers undergoing training, district-war;

(*b*) how many of the training schools are under Government management; and

(*c*) where they are located?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) to (*c*) A statement * is placed on the table of the House.

Sri A. VEDARATHNAM : இந்தப் பள்ளிகள் எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது, ஜனத்தொகை அடிப்படையிலா அல்லது தேவைக்குத் தகுந்தபடியா ? ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இருப்பதால் இது எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : சர்க்கார் ஏற்படுத்துகிற பள்ளிகள் தேவையின் அடிப்படையில் ஏற்படுத்தப்படுகின்றன. தனியார் ஏற்படுத்த முன் வரும்போது, அதற்கு வேண்டிய நிதி வசதி போன்றவைகளை சௌகரியமாக அமைத்துக் கொடுக்கிறவர்களுக்கு, இதை ஆரம்பிக்க அனுமதி கொடுக்கப்படுகிறது.

Sri V. K. KOTHANDARAMAN : அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்தர பாடசாலையில், ஐந்து, ஆறு பாரங்களில், டீச்சிங் ப்ராக்டீஸ் என்று ஆப்ஷனல் சப்ஜெக்ட் எடுத்து படித்து தேறிய பிறகு அதற்கு மேல் ஒரு வருஷம் படித்து டி.எஸ்.எல்.ஸி. சர்டிபிக்கேட் வாங்கி வருகிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? சமீபத்தில் காலேஜ் எலிஜிபிள் ஸ்டூடன்ட்ஸ் ஒரு வருஷம் ட்ரெய்னிங் சேர வேண்டும் என்ற புதிய உத்தரவை சர்க்கார் இட்டுள்ளதா ? அதற்கு காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி மூலக் கேள்வியில் இருந்து எழவில்லை. இருந்தாலும் அங்கத்தினர் அவர்களுக்கு அதை சொல்லிவிடுகிறேன். இந்த டீச்சிங் ப்ராக்டீஸ், டைவர்ஸிபைட் கோர்ஸில் ஒன்றாக நடத்தி வந்தது சரியாக நடைபெறவில்லை. அதனால் நல்ல பயிற்சி ஏற்படவில்லை என்று நிபுணர்கள் அபிப்பிராயம் சொல்லியிருப்பதால் அதை இப்பொழுது எடுத்து விடுவது என்று முடிவிற்கு வரப்பட்டிருக்கிறது. பரிசீலனை செய்த கமிட்டிகள்கூட அதை சிபார்சு செய்திருக்கிறது. ஆகவே, அதற்கு எந்த விதமான இடமும் கொடுக்காமல் பாஸ் செய்தவர்களை எடுத்து இரண்டு வருஷ பயிற்சி கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது.

Sri K. ANBAZHAGAN : இந்த மாநிலத்தில் உள்ள ஏராளமான பயிற்சி பள்ளிகளில் இருந்து ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் தேர்வு பெற்று வெளி வரும்போது ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் இருக்க வேண்டுமென்ற முறையை ஏற்படுத்துவது பல ஆசிரியர்களுக்கு வேலையில்லாத நிலையை உண்டாக்கி விடுகிறது என்பதை அரசாங்கம் உணருமா ? அது குறித்து பரிசீலிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதையெல்லாம் பரிசீலனை செய்துதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாது. ஏழாயிரத்து எண்ணூறு ஆசிரியர்கள் ஒவ்வொரு வருஷமும் பயிற்சி பெற்று வெளி வருகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

---

* Printed as Appendix II on pages 264–267 infra.

5th April 1958]

Sri K. VINAYAKAM : May I know from the Hon. the Minister for Education whether the principle relating to pupil-teacher ratio in high schools and elementary schools is also applicable to the teachers' training schools and if so, what is the ratio between the pupil and teacher in such schools?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir, there is a prescribed ratio as between the number of pupils and the number of teachers in the training schools.

Tapioca

* 572 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken to improve the tapioca industry; and

(*b*) whether any facilities have been provided for its export?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) It is presumed that the question relates to the manufacture of sago from tapioca. The recommendations of the Sago Experts Committee for the manufacture of Sago on hygienic lines have been accepted by the Government and are being implemented. The Government of India have extended up to 31st December 1959 the period of protection to Sago Industry against foreign competition by a levy of 35 per cent *ad valorem* import duty on imported Sago. The Sago industry has been made eligible for aid under the State Aid to Industries Act.

The following proposals are also under consideration of the Government :—

(i) Assignment of lands for the cultivation of tapioca to ensure raw material for the industry.

(ii) Grant of assistance for the establishment of a laboratory at Salem for quality control.

(iii) Appointment of an Assistant Director of Industries and Commerce at Salem to be in charge of this industry.

(iv) The deputation of an officer of the Agricultural Department to study the methods of cultivation of tapioca and the manufacture of globules (Sago) in Malaya.

(*b*) The Government of India have allowed the export of Sago to all destinations except the Portugese possessions.

Sri N. K. PALANISAMI : நிபுணர்கள் சொன்ன சிபார்சுகளில் பாக்கி எவ்வளவு அமுலாக்கப்படவில்லை ?

The Hon. Sri R. VENKATARAMAN : நண்பர் அவர்கள் நிபுணரின் சிபார்சுகளைப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். எந்த சிபார்சு வேண்டுமென்று சொன்னால் பதில் சொல்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : அமைச்சர் அவர்கள் சொன்னபோது, நிபுணர் கமிட்டியின் சிபார்சு பிரகாரம் மத்திய சர்க்கார் ட்யூட்டி போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதன் காரணமாக முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிகமாக உற்பத்தி பெருகியிருக்கிறதா ?